Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 21 வள்ளுவர் ஆண்டு 2037 ஆவணி 31 சனிக்கிழமை (16.09.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 291

# மனிதாபிமான நெருக்கடியை தீர்க்க

# ஏ-9 பாதையை உடனே திறவுங்கள்

## கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் வலியுறுத்து



கிளிநொச்சி,செப்.16

**வவுனியா - யாழ்ப்பாணம் ஏ-9 நெடுஞ்சாலையும் தமிழர் தாயகத்துக்கான மற்றைய சில பாதைகளும் மூடப்பட்டிருப்பதால் தமி ழர் தாயகத்தில் பாரிய மனிதாபிமான நெருக் கடி ஏற்பட்டிருக்கிறது. எனவே ஏ-9 பாதையையும் ஏனைய வீதிகளையும் உடனடி யாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் நேற்று கிளிநொச்சியில் தம்மைச் சந்தித்த கண்காணிப் புக்குழுவின் புதிய தலைவர் லாஸ் கோல்பேர்க்கிடம் வலியுறுத்திக் கேட்டிருக்கிறார்.**

**ஏ-9 பாதை திறக்கப்படுவதற்கு அவசர நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை கண்காணிப்புக்குழுத் தலைவரிடம் தமிழ்ச்செல்வன் விளக்கினார்.**

தமிழ்ச்செல்வனுக்கும் கண்காணிப்புக் குழுத்தலை வருக்குமிடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் கிளிநொச்சி யில் நடைபெற் றது.

இப்பாதையை மூடியிருப்பதன் மூலம் அரசு யுத்தநிறுத்த உடன்படிக்கையை துச்சமாக மதித்து நடந்திருக்கிறது. இது மட்டுமல்லாமல் மக்களுக்கு மனிதாபிமான பிரச்சினைகளை யும் தோற்றுவித்திருக்கிறது.

இந்தப் பாதை திறக்கப்பட (06ஆம் பக்கம் பார்க்க)

## வருகிறார் சொல்ஹெய்ம் ஒக்டோபர் முற்பகுதியில்!

கொழும்பு, செப்.16

நோர்வேயின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்ம் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் முற்பகுதியில் கொழும்புக்கு வரவுள்ளார் என்று இணையத்தளம் ஒன்று நேற்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.

அரசும் புலிகளும் நிபந்தனையற்ற பேச்சுக்குச் சம்மதித்துவிட்டனர் என்று பிரசெல்ஸில் எரிக் சொல்ஹெய்ம் அறிவித்திருந்தார். அதற்குப் பிறகு இலங்கையில் மீண்டும் சமாதானப் பேச்சுகள் குறித்த நம்பிக்கைகள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் நோர் வேயின் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் அடுத்த மாதம் கொழும்பு வருகிறார்..

அவர் அரசு மற்றும் புலிகள் தரப்பினருடன் பேச்சுக் குறித்த முன்னேற்பாடுகள் தொடர்பாக ஆராய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு அந்த இணையத்தளம் மேலும் தெரிவித்திருக்கிறது. (த)

## இலங்கைக்கான இந்தியத் தூதுவராக நிருபமாவின் இடத்துக்குப் புதியவர்

கொழும்புக்கான இந்தியத் தூதுவர் திரு மதி நிருபமா ராவ், விரைவில் சீனாவுக்கான இந்தியத் தூதராகப் பதவியேற்கவிருக்கின் றார் என நம்பகரமாகத் தெரியவருகிறது.

தற்போது சிங்கப்பூருக்கான இந்தியத் தூதராகப் பணிபுரியும் ஏ.பிரசாத், கொழும் புக்கான புதிய இந்தியத் தூதராக நியமனமா வார் எனத் தெரிகின்றது.

இந்திய வெளியுறவுத்துறைக்கு புதிய செயலாளர் நியமனம் செய்யப்பட்டதையடுத்து, வெளியுறவுத்துறையின் புதுடில்லி அமைச்சு அலுவலகத்தில் பல பதவி மாற்றங்கள் செய் யப்பட்டுள்ளன. இதன் ஒரு கட்டமாக தற் போது சீனாவில் உள்ள இந்தியத் தூதுவர் வெளியுறவுத் துறையின் புதுடில்லி அலுவ லகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளார். அவரது இடத்துக்கு - சீனாவுக்கு - இந்தியாவின் மூத்த ராஜதந்திரிகளுள் ஒருவரான திருமதி நிருபமா ராவ் நியமிக்கப்படுகின்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

கொழும்புக்கான புதிய இந்தியத் தூதுவ ராக நியமிக்கப்படவிருக்கும் பிரசாத், இலங்கை விவகாரங்களுக்கு புதுமுகம் என்பது குறிப் பிடத்தக்கது. (உ)

## படுகொலைகள்

### ஆறுகால்மடத்தடியில்

நேற்றுமுன்தினமிரவு ஆறுகால்மடம் பகு தியில் வெள்ளை வானில் கொண்டுவரப்பட்ட இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இரவு பத்தரை மணியளவில் மின்துண்டிப்பு இடம்பெற்றிருந்த வேளையில் அடுத்தடுத்து இரு சூட்டுச் சத்தங்கள் கேட்டன என்று அப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பண்டத்தரிப்பு, கேணியடியைச் சேர்ந்த வரான மயில்வாகனம் சற்குணரட்ணம் (வயது 32) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் என்று அவரது உறவினர்கள் அடையாளம் காட்டியுள்ளனர்.

உயிரிழந்த இளைஞரின் கண்கள் கறுப்புத் துணியினால் கட்டப்பட்டிருந்தன. இரு கண் (06ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கைப் பிரிக்கக் கோரும் மனுக்கள் விசாரணை ஒரேநாளில் பூர்த்தி! தீர்ப்பு ஒத்திவைப்பு!

கொழும்பு, செப்.16

வடக்கு-கிழக்கு மாகாணங்களைப் பிரிக் கும்படி உத்தரவிடக்கோரி கொழும்பு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப் படை உரிமைமீறல் மனுக்கள் மூன்றின் மீதான விசாரணை உயர்நீதிமன்றத்தில் ஐந்து நீதிய ரசர்கள் ஆயத்தின் முன்னால் நேற்று ஒரே நாளில் முடிவுற்றது. தீர்ப்பு வழங்குவது ஒத்தி வைக்கப்பட்டது.

இந்த அடிப்படை உரிமைமீறல் மனுக்கள் மீதான விசாரணையின்போது தங்களை இடை யீட்டு மனுதாரர்களாகச் சேர்த் துக்கொள்ளும் படி கோரி - அந்த அடிப்படை உரிமைமீறல் மனுக்களுக்கு எதிரான வாதங்களுடன் - மூன்று தமிழர்கள் உட்பட நான்கு பேரினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த நான்கு இடை யீட்டு மனுக்களையும் உயர் நீதிமன்றம் விசா ரணைக்கு ஏற்காமல் நிராகரித்தது.

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட மூவர் இந்த அடிப்படை உரிமைமீறல் மனுக் களைத் தாக்கல் செய்திருந்தனர்.

அதை ஆட்சேபித்து மூன்று தமிழர்கள் மற்றும் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சோஷலிஸ்ட் கட்சி வேட்பாளராகப் போட்டி யிட்ட ஸ்ரீதுங்க ஜயசூரிய ஆகியோர் இடை யீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் நிஹால் ஜயசிங்க, நிஸங்க உடலகம, ராஜா பெர்னான்டோ, நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் முன் னிலையில் நேற்று எடுத்துக்கொள்ளப்பட்டன.

(06ஆம் பக்கம் பார்க்க)

## ஆள்கடத்தல்கள், கொலைகள் பற்றி விசாரிக்க தனிநபர் ஆணைக்குழு

கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இடம்பெறும் மனிதப் படுகொலை கள், கடத்தல்கள், ஆள்கள் காணாமற்போகும் சம்பவங்கள் பற்றி விசாரிக்கவென ஓய்வு பெற்ற மேல்நீதிமன்ற நீதிபதி மகாநாம தில கரட்ணவை தனிநபர் ஆணைக்குழுவாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள் ளார் என நேற்று ஜனாதிபதி செயலகம் அறி வித்துள்ளது.

கடத்தல்கள், காணாமற்போதல் போன்ற சம்பவங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு மக் கள் கொடுத்த முறைப்பாட்டை அடுத்தே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

இந்த ஆணைக்குழுவில் பொதுமக்கள் தமது முறைப்பாட்டைத் தெரிவிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது. முறைப்பாடு செய்வதற்கான தொலைபேசி இலக்கங்கள் மற்றும் முகவரிகள் விரைவில் வெளியிடப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-12)

### கிணற்றில் கடற்படை சிப்பாயின் சடலம்

கொழும்பு, செப்.16

திருகோணமலை - லிங்கநகர் பகுதியில் பாழடைந்த வீடு ஒன்றின் பின்புறத்தில் உள்ள கிணற்றில் இருந்து நேற்றுப் பிற்பகல் கடற்படைச் சிப்பாய் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அப்பகுதியில் எரியூட்டப்பட்டநிலை யில் மோட்டார் சைக்கிள் ஒன்றும்காணப்பட் டது எனத் தெரியவருகின்றது.

இதனையடுத்து, அப்பகுதியில் படையி னரும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஐ-12)

## போர்நிறுத்த உடன்படிக்கை செம்மையாக அமுல் செய்யப்பட்டாலேயே பேசமுடியும்

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் பி.பி.ஸிக்கு செவ்வி

கிளிநொச்சி, செப்.16

போர்நிறுத்த உடன்படிக்கை நூறுவீதம் அமுல் செய்யப்படுகின்ற ஒரு சூழ்நிலையி லேயே பேச்சுநடத்துவது சாத்தியப்படும். இதனையே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் தெரிவித்திருக்கிறோம்.

இப்படித் தெரிவித்தார். புலிகளின் இராணு வப் பேச்சாளர் இ.இளந்திரையன்.

பி.பி.ஸி. தமிழோசைக்கு அவர் நேற்று வழங்கிய செவ்வியில் கூறியிருப்பதாவது:-

கண்காணிப்புக் குழுவினருடனான சந்திப் பில் குடாநாட்டில் உணவு விநியோகமின்றி இருக்கும் மக்களுக்கான உணவு நிலையைச் சீர்செய்யவேண்டும் என்பது குறித்தும் வலி யுறுத்தப்பட்டுள்ளது. முக்கியமாக நாங்கள் பாதை திறப்பது தொடர்பாக முழு சம்மதத்தை யும் தெரிவித்திருந்தோம். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக இரண்டுமுறை இதனை உறுதிப்படுத்தியிருந்தோம்.

ஆனால், அரசு அங்கு ஒரு போர்ச்சூழலை ஏற்படுத்தி, மக்களுக்கான உணவு வழங் கலைத் தடைசெய்துகொண்டிருப்பதை கண் காணிப்புக்குழுவினருக்கு நாங்கள் தெரியப் படுத்தினோம்.

இப்போதுள்ள யுத்த சூழலை ஏற்படுத்தி யிருப்பது யாரென்பதை கண்காணிப்புக் குழு வினர் நேரில் சென்று பார்க்க முடியும் என் பதையும் சொல்லியிருக்கின்றோம்.

**கேள்வி:** ஒக்ரோபர் மாதத்தில் ஒஸ்லோ

(06ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியை
திருமதி சூலமணி மகாதேவாவின் அன்புக் கணவர்
**கதிரவேலு மகாதேவா**
(ஆசிரியர், யா/இயற்றாலை அ.மி.த.க. பாடசாலை)
அவர்கள் இறைபதமெய்தியமையால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மந்துவில், கொடிகாமம்.* **அதிபர், ஆசிரியர்கள்.**

# மரண அறிவித்தல்கள்

## அருளப்பு றோக் அருளானந்தம் (அருள்)

*[கட்டட ஒப்பந்தகாரர்]*



அருளப்பு றோக் அருளானந்தம் (அருள்) அவர்கள் நேற்றுமுன்தினம் (14.09.2006) வியாழக்கிழமை புதுக்குடியிருப்பில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அருளப்பு செல்லையா - அக்னேஸ் ஆகியோரின் மூத்த மகனும் புஸ்பம்மாவின் அன்புமிகு கணவரும் எட்மன் பேக் (வேஸ்லி - அமெரிக்கா), றொசாஜினி (ஆசிரியை), ஜெலாஜினி (பிரதேச சபை - புதுக்குடியிருப்பு), டினேஸ்ராஜ் (திறந்த பல்கலை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் மகராசம்பிள்ளை - நிக்ஸனின் (பிரான்ஸ்) மாமனும் காலஞ்சென்ற மத்தியாஸ் - செபமாலை (புதுக்குடியிருப்பு) மற்றும் மேரிநாகம்மா ஆகியோரின் மருமகனும் அமலதாஸ்; அன்ரன் (இந்தியா), காலஞ்சென்ற குளியல் (நவம்), சாள்ஸ் (அமெரிக்கா), யோனாஸ் (அமெரிக்கா), இராசேஸ்வரி (லண்டன்), சேவியர் (கொத்தலா), பரமேஸ்வரி (பிரான்ஸ்), குலேந்திரன் (அற்புதம் - லண்டன்) ஆகியோரின் அ[illegible] அண்ணனும் லீலா, கல்யாணி (இந்தியா), ஸ்ரெவ்னி (கொழும்பு), சின்னு (அமெரிக்கா), அனுஷியா (அமெரிக்கா), ஜீவா (லண்டன்), ஆனந்தி, லங்கேஸ் (பிரான்ஸ்) மற்றும் தம்பிஐயா (இத்தாலி), அலெக்ஸ் (புதுக்குடியிருப்பு), காலஞ்சென்றவர்களான அன்னப்பிள்ளை, றோசம்மா (புதுக்குடியிருப்பு), வரவணிக்கம் (புதுக்குடியிருப்பு), சின்னப்பு (கனடா), காலஞ்சென்ற அருட் சகோதரி மேரி மெற்றில்டா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

இறுதிச்சடங்கு பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*107/3, கடற்கரை வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**டினேஸ் (மகன்).**

## திருமதி மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை (மல்லிப்பூ)

மாதகலைப் பிறப்பிடமாகவும் 831, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை நேற்றுமுன்தினம் (14.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் செபஸ்தியாம்பிள்ளையின் அன்பு மனைவியும் ஸ்ரனிஸ்லஸ், நீற்றா, கிறிஸ்ரீனா ஆகியோரின் அன்புத் தாயும் மரியபூக்களஸ்ரீன், காலஞ்சென்ற அன்ரன்ராஜ்குமார் மற்றும் ஜெயரட்ணம் ஆகியோரின் மாமியும் றொசானி, சஞ்ஜீவன், ஜெனிவிதா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அனனாரின் நல்லடக்க ஆராதனை இன்று (16.09.2006) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புனித யுவானியார் ஆலயத்தில் (சுண்டிக்குளி) திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் புனித கொஞ்செஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*831, ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

*தகவல்:*
**குடும்பத்தினர்.**

## நாகமுத்து கந்தசாமி

*[பிரபல சுருட்டு, புகையிலை உற்பத்தியாளரும்-விற்பனையாளரும்]*

வசாவிளான், வன்னியர் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கு, வேம்பிராயை வதிவிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தசாமி நேற்றுமுன்தினம் (14.09.2006) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து-சின்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வனும் தவமணியின் அன்புக் கணவரும் கனகலிங்கம் (ஜேர்மனி), ஜமுனாராணி, மகாலிங்கம் (ஜேர்மனி), கமலராணி (இந்தியா), கலாராணி (இந்தியா), மனோகரலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், வல்லிபுரம், நடராசா மற்றும் வேல்நாயகம் (கனடா), தவமணி (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் குணம் (ஜேர்மனி), நவரத்தினம், வசந்தகுமார் (ஜேர்மனி), மோகனதாஸ் (இந்தியா), ராஜூ (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமனும் சேயோன், சேந்தன், செங்கோடன், செல்வேற்குமரன், செந்தமிழ்க்குமரன், அமரகாந்தன், கேதீஸ்குமரன், பிரதீப், தபோ, தர்சினி, ஜெலக்சனா, தர்சி, ஜோசுபா, மயூரன், ஜனனி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (15.09.2006) வெள்ளிக்கிழமை மீசாலை வடக்கு, மீசாலை இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வேம்பிராய் இந்து பொதுமயானத்தில் தகனம்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

*தகவல்:*
**தவமணி தம்பிராசா (சகோதரி)**
**தொ.பே. 0785108215**
**ந.செல்வேற்குமரன் (பேரன்)**
**தொ.பே. 0773224925**

# சிறுநீரக நோயாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம்,செப்.16

சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சை செய்து கொழும்பிலிருந்து மருந்துகள் பெற்றுக்கொள்வதற்காக எமது பணிமனையில் பதிவுசெய்த நோயாளர்கள் இம் மருந்திற்கான பணத்தினை நாளைமறுதினம் திங்கட்கிழமை மதியத்திற்கு முன்னர் தமது பணிமனையில் செலுத்துமாறு சுகாதார சேவைகள் மாகாணப் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் ஆர். கேதீஸ்வரன் கேட்டுள்ளார்.

# சமுர்த்தி உத்தியோகத்தர் கவனத்துக்கு

தென்மராட்சி,செப்.16

தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் அனைத்து சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

இதேவேளை, நிவாரணம் வழங்குவதற்குரிய பட்டியலை இன்று நண்பகல் பன்னிரண்டு மணிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் கையளிக்குமாறு கிராம அலுவலர்களை அவர் கேட்டுள்ளார். (1-117)


## விற்பனைக்கு

9 Month Greatdane நாய், Washing Machine, Speaker Set, Amplifier, 32''TV, Table, Stools, Hellmet, Curtains, Tea-dinnerset, plastic Buckets, Mosquito Nets சின்ன பிள்ளைகளின் விளையாட்டுப் பொருள்கள், Kitchen items. **Pragash, 95, palaly Road, Jaffna.**
(இலுப்பையடிச் சந்திக்கருகில்)


# மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சுப்பிரமணியம்

அச்சுவேலி தெற்கு, பெரியதம்பிரான் கோயிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் நேற்று (15.09.2006) வெள்ளிக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் சின்னத்தம்பி - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும் துளசிமலரின் பாசமிகு கணவனும் தயாநந்தினி (இத்தாலி), சுகந்தினி, துதிஸ்கரன், பிரசாந்தினி ஆகியோரின் அன்புத் தந்தையும் நீதிராசாவின் (இத்தாலி) மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*பெரியதம்பிரான் கோயிலடி,*
*அச்சுவேலி தெற்கு,*
*அச்சுவேலி.*

தகவல்:
சு.துளசிமலர் (மனைவி)

# ஒரு வாரத்தின் பின்னர் பாண் விநியோகம்

வடமராட்சி,செப்.16

வடமராட்சிப் பகுதியில் ஒருவாரத்தின் பின்னர் நேற்றுப் பாண் விநியோகம் இடம்பெற்றது. யாழ். செயலகம் மா விநியோகம் செய்ததையடுத்து, பேக்கரிகளில் பாண் தயாரிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டது. மக்கள் முண்டியடித்துக்கொண்டு பாணை வாங்கினர். (1-173)

# வடமராட்சியில் சுற்றிவளைப்புத் தேடுதல்

வடமராட்சியில் இரும்புமதவடி, புலவர் ஓடை, ஆலங்கட்டை ஆகிய பகுதிகளைச் சுற்றிவளைத்து படையினர் நேற்று அதிகாலைமுதல் தேடுதல் நடத்தினர். வீடு வீடாக நடத்தப்பட்ட இத் தேடுதலில் எவரும் கைதுசெய்யப்பட்டதாகத் தகவல் இல்லை. (1-173)


## மனோகரா யாழ்ப்பாணம்

டிஸ்யூம் புகழ்
ஜீவா, கோபிகா,
மோகன்லால்,
பிரகாஷ்ராஜ்
மற்றும் பலர்
நடித்த
**அரண்**
காட்சிநேரம்
[illegible]


# தீவகம் செல்ல நேற்று அனுமதியில்லை

யாழ்ப்பாணம் செப்.16

யாழ்ப்பாணத்தில் இருந்து தீவகத்தினுள் நேற்றுக்காலை எவரும் உட்செல்ல அனுமதிக்கப்படவில்லை.

யாழ். நகரில் இருந்து கடமை நிமித்தம் தீவகம் செல்ல முயன்ற அரச ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் நேற்றுப்பண்ணைப் பாலத்திற்கு அப்பால் செல்வதற்கு படையினர் அனுமதிக்காததனால், அவர்கள் திரும்பி வந்தனர் எனத் தெரியவந்தது.

தீவகத்தில் நேற்றுக் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது. (1-51)

# வாழ்த்துகின்றோம்

கனடாவில் திருமண நாளின் ஒருவருடப் பூர்த்தியை
இன்று கொண்டாடும்
**சுகந்தன் - தயாநிதி**
*தம்பதிகளை பல்லாண்டு காலம் வாழ வாழ்த்துகின்றோம்*

*397, நாவலர் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
**நண்பர்கள்.**

# கண்ணீர் அஞ்சலி



14.09.2006 அன்று சிவபதமடைந்த எமது
பாடசாலை ஆசிரியர்
**கதிரவேலு மகாதேவா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
யா/இயற்றாலை அ.மி.த.க பாடசாலை, வரணி.

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியரான இராமலிங்கம் வினோதகுமாரின் தந்தை
**சின்னப்பு இராமலிங்கம்**
அவர்களின் மறைவுச் செய்திகேட்டு துயரடைகின்றோம். அவரது மறைவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

*மாவட்ட காணிப்பதிவகம்,*
*யாழ். செயலகம்.*

மாவட்ட காணிப்பதிவாளரும்,
மேலதிக மாவட்டப்பதிவாளரும்
மற்றும் ஊழியர்களும்.

# கண்ணீர் அஞ்சலி

இல.831, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவு கிராம அபிவிருத்தித் திணைக்கள தையல் போதனாசிரியர் திருமதி கிறிஸ்ரீனா அல்போன்ஸ் ஜெயரத்தினம் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி மரியம்மா செபஸ்தியாம்பிள்ளை**
அவர்கள் 14.09.2006இல் காலமானார்.

அவரின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

*யாழ்ப்பாண மாவட்டம்.*

நலன்புரிச் சங்கம்,
கிராம அபிவிருத்தித் திணைக்களம்.

# மீள் கேள்வி அறிவித்தல்
# நிர்மாண வேலை (காலநீடிப்பு)

01.தலைவர், மாவட்ட கேள்விச் சபை அவர்களால் தகுதி வாய்ந்த சகல ஒப்பந்தகாரரிடமிருந்து கீழ்வரும் வேலைகளுக்கு மூடிய கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | ஒப்பந்த குறியீட்டு இல. | ஒப்பந்த விவரம் | இக்ராட் தரம் | கேள்வி பிணை | மீளளிக்கப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|
| 01. | JF/TSU/DS/01 | பிரதேச செயலகம் நிர்மாணித்தல், காரைநகர். கட்டம் I | M 4 | 264,000.00 | 1,000.00 |
| 02. | JF/MC/DS/01 | பிரதேச செயலகம் நிர்மாணித்தல், நல்லூர். கட்டம் I | M 7 | 46,000.00 | 1,000.00 |

02.கேள்வி அறிவித்தல் தொடர்பில் பின்வரும் தகைமைகளை சகல ஒப்பந்தகாரர்களும் கொண்டிருக்க வேண்டும்.

(1)மேற்கூறிய அட்டவணையின் பிரகாரம் குறிப்பிடப்பட்ட ICTAD தரத்தை கொண்டிருத்தல் வேண்டும்.

(2)ICTAD அறிவுறுத்த[illegible]க்கமைய மேற்படி வேலை தொடர்பில் போதிய கேள்வி தகவைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3)முன்னைய வேலைகளில் மோசமான நேர்மையற்ற வெளிப்படுத்தல்களைக் கொண்டிருத்தல் கூடாது.

(4)ஒப்பந்தகாரர் புதுப்பித்த தகவுப் பதிவுப் புத்தகத்தை கேள்வி ஆவணங்கள் பெற முன்னர்ஒப்படைக்க வேண்டும்.

(5)கேள்விதாரர் VAT பதிவு செய்ததன் பிரதியையோ அல்லது VAT பதிவு செய்யப்படாமைக்கான கடிதத்தை ஆணையாளர், உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் உறுதிப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டும்.

03.ஆர்வமுள்ள கேள்விதாரர் மேலதிக விவரங்களையும், கேள்வி ஆவணங்களையும் இலவசமாக பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம் (மா) யாழ்ப்பாணம் (தொ.இல. 021 – 222 2632) பரிசீலிக்க முடியும்.

04.கேள்வி ஆவணங்களை 25.09.2006 பிற்பகல் 03.00 மணிவரையும் மீளளிக்கப்படாத கேள்வி தொகை ரூபா 1,000.00 பிரதம பொறியியலாளர், கட்டடங்கள் திணைக்களம், யாழ்ப்பாணத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

05.மூடிய கேள்விகளை தலைவர், மாவட்ட கேள்விச்சபை கச்சேரி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 02.10.2006 பிற்பகல் 01.00 மணிக்கு முன்பாக அனுப்பி வைப்பதுடன் உடனடியாக கேள்வி திறக்கப்படும் இந்நேரம் ஒப்பந்தகாரரோ அல்லது அவர் சார்பில் உரித்தளிக்கப்பட்டவரோ சமுகமளிக்க முடியும்.

06.மேற்படி கேள்வி தயாரித்தல், அனுப்புதல் தொடர்பில் ஏற்படும் எந்த செலவீனங்களுக்கும் தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

பிரதம பொறியியலாளர் அலுவலகம்,
கட்டடங்கள் திணைக்களம் (மா),
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-50999)

க.கணேஷ்
தலைவர்,
மாவட்ட கேள்விச் சபை/
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டை பஞ்சத்திலிருந்து காப்பாற்ற ஏ-9 பாதையை திறக்கச்செய்வதே மாற்றுவழி

**சமாதானம் நல்லெண்ணத்துக்கான மக்கள் குழு ஜனாதிபதிக்கு வலியுறுத்து**

யாழ்ப்பாணம்,செப்.16

உணவுப்பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள கடும் தட்டுப்பாட்டு நிலையில், உணவுப் பொருள்களை கப்பல்மூலம் எடுத்து வருவதானது இப்பகுதி வாழ் அனைத்து மக்களுக்கும் போதுமானதாக இல்லை. மக்கள் பெரும் கஷ்ர நிலையில் உள்ளார்கள். இந்த நிலைமையைச் சீர்செய்வதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு ஏ-9 பாதையைத் திறப்பதுதான் சிறந்த மாற்று ஏற்பாடாக இருக்கும்.

இவ்வாறு தெரிவிக்கும் கடிதம் ஒன்றை சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் குழு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கு அனுப்பிவைத்துள்ளது.

குடாநாட்டில் நடந்துவரும் கொலைகள், ஆள்கள் காணாமல்போதல் தொடர்பாக மேற்பட்டி குழு அக் கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளது:-

வட மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் பாதுகாப்புப் படைகள் நிலைகொண்டிருக்கும் நிலையிலும் தினசரி ஐந்திலிருந்து பத்துப் பேர்வரை கொல்லப்பட்டு வருகின்றனர். இது மிக விழிப்புடன் கண்காணிக்கப்பட்டுத் தவிர்ப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். குடாநாட்டுக்கான போக்குவரத்து தொடர்பாக அக்குழு பின்வருமாறு ஜனதிபதிக்கு தெரிவித்துள்ளது.

ஓகஸ்ட் 11ஆம் திகதி தொடக்கம் போக்குவரத்து சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஏராளமான மக்கள் தமது குடும்பங்களுடன் போய் இணைந்துகொள்ள முடியாமலும் தமது கடமைகளில் ஈடுபட முடியாமலும் பல்வேறு இடங்களில் சிக்குண்டு தவிக்கிறார்கள். இந்த விடயம் மனிதாபிமான அடிப்படையில் அணுகப்பட வேண்டிய ஒன்று. இந்த மக்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு அக் குழு ஜனாதிபதிக்குத் தெரிவித்துள்ளது. (ப)

# அடிப்படை வசதிகளின்றி இடம்பெயர்ந்துள்ளவர்கள் கஷ்டம்

கல்வியங்காடு.செப்.16

யாழ்.நகரின் கரையோரப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தற்காலிக முகாம்களில் வசிக்கும் மக்கள் அடிப்படை வசதிகளின்றி அல்லற்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாசையூர், குருநகர்,திருநகர், கொழும்புத்துறை போன்ற பிரதேசங்களில் எறிகணைகள் வீழ்ந்து வெடித்ததனால் இடம்பெயர்ந்து தற்போது பெரியகோயில், சென்.பற்றிக்ஸ் கல்லூரி, சென்.சாள்ஸ் மகாவித்தியாலயம், சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயம், திருக்குடும்ப கன்னியர்மடம் பாடசாலை ஆகிய இடங்களில் மக்கள் தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ். சமூக மேம்பாட்டு நிறுவனம் (ஜொசாக்) தற்காலிகமாக முகாம் ஒன்றை அமைத்து அங்குள்ளவர்களைப் பராமரித்து வருகின்றது.

மேற்படி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் உதயனுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆரம்பத்தில் சில அரசசார்பற்ற தொண்டு நிறுவனங்கள் உதவிகளை வழங்கி வந்ததாகவும் ஆனால், தற்போது எதுவித தொண்டு நிறுவனங்களும் உதவிகளை வழங்குவதில்லை எனவும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

மக்கள் இடப்பற்றாக்குறையால் பல்வேறு சிரமங்களுக்கு முகம்கொடுத்து வருகின்றனர். மலசல கூடங்கள் போதியளவு இன்மையால் சுகாதாரச் சீர்கேடுகள் இடம்பெறுகின்றன. இதனால் தொற்றுநோய்கள் பரவும் ஆபத்தும் காணப்படுகிறது.

அதேவேளை உணவுப்பொருள்கள் மற்றும் குடிதண்ணீருக்கும் பலத்த தட்டுப்பாடு நிலவுவதாகவும் இதனால் மக்கள் பலத்த அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

தொண்டு நிறுவனங்கள் மேற்படி இடம்பெயர்ந்த மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு அடிப்படை உதவிகளை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என யாழ்.சமூக மேம்பாட்டு நிறுவனம் சர்வதேச தொண்டு நிறுவனங்களைக் கேட்டுள்ளது.

(ப-79)

## வடமராட்சி, தென்மராட்சிப் பகுதிகளில்

# இடம்பெயர்ந்துள்ளவர்களுக்கு புனர்வாழ்வு நிறுவனம் உதவி

## மருத்துவ முகாம்களும் நடத்தப்படுகின்றன

கல்வியங்காடு.செப்.16

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் வடமராட்சி மற்றும் தென்மராட்சி பகுதிகளில் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து முகாம்களில் வசித்துவரும் மக்களுக்கு பல்வேறு உதவிகளை வழங்கிவருகிறது.

குறிப்பாக கர்பிணித் தாய்மாருக்கும் பாலூட்டும் தாய்மாருக்கும் போசாக்கு குறைந்த பிள்ளைகளுக்கும் சத்துணவுப் பொருள்களை வழங்கிவருகிறது.

அதேவேளை வடமராட்சிப் பிரதேசத்தில் நடமாடும் இலவச மருத்துவ முகாம் ஒன்றைக் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் நடத்தி வருவதுடன் இலவசமாக மருந்துப் பொருள்களையும் வழங்கிவருகிறது.

கிழமைக்கு இருதடவை நடைபெறும் மருத்துவ முகாமில் பெருமளவிலான மக்கள் பயனடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(ப-79)

## மானிப்பாய் மேற்கு விவசாயிகள்

# காலபோக நெல்விதைப்பை அடுத்தமாதம் ஆரம்பிப்பர்

வலி.தென்மேற்கு,செப்.16

மானிப்பாய் மேற்கு விவசாயிகள் சம்மேளனம் 2006/2007 வருட காலபோக நெற்செய்கை தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்றை அண்மையில் நடத்தியது.

சம்மேளனத் தலைவர் சி.பொ.ம.க. முதலியார் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் காலபோக நெல் விதைப்பை அடுத்த மாதம் 6 ஆம் திகதி முதல் ஆரம்பிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. கட்டாக்காலி ஆடு, மாடுகளை இக்காலப் பகுதியில் கட்டி வளர்க்க வேண்டும் என்று பொதுமக்களை கேட்டுக்கொள்வது என்றும், விதை நெல் மற்றும் உர மானியங்கள் ஆகியவற்றை விவசாயிகளுக்கு உடுவில் கமநல சேவை நிலையத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொடுப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை - கட்டாக்காலி ஆடு, மாடுகளை பிடிப்பதற்கு இரண்டு பேரை சம்மேளனம் இக் கூட்டத்தில் நியமனம் செய்துள்ளது.

உடுவில் கமநலச் சேவை நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் சோ. சோதிநாதன் கலந்து கெண்டு காலபோக நெற் செய்கைபற்றி உரையாற்றினார். (ப-135)

# கிராம அதிகாரி தரம் II இற்கு விண்ணப்பிக்கச் சந்தர்ப்பம்

யாழ்ப்பாணம்,செப்.16

கிராம அதிகாரி தரம் **II** பதவிக்கு விண்ணப்பம் செய்வதற்கு இன்னும் இருநாள்கள் மட்டுமே உள்ளன.

பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு இதற்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஜி.சீ.ஈ.சாதாரண தரத்தில் இருதடவைகளுக்கு மேற்படாத வகையில் 4 திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் மட்டும் சித்தியடைந்திருந்தால் போதுமானது.

விண்ணப்பங்கள் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், பெலவத், பத்திரமுல்ல எனும் விலாசத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும்.

விண்ணப்பதாரர் பிரதேச செயலர் பிரிவு இலக்கம், நகர இலக்கம் என்பவற்றைச் சரியாக குறிப்பிட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் கிராம அதிகாரி பதவி வெற்றிடம் நிரப்ப இரண்டு தடவைகள் விண்ணப்பங்கள் கோரப்பட்ட போதும் பரீட்சைகள் இடம்பெறவில்லை.

இதேவேளை-

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளில் 140இற்கும் மேற்பட்ட கிராம அதிகாரிகள் வெற்றிடங்கள் உள்ளதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. (ப-79)

# பளைப் பகுதியில் கிபிர் குண்டுவீச்சினால் அரச கட்டடங்கள் பலவும் நாசமாகின

**கடந்த வருடம் கட்டப்பட்ட மருத்துவ மனையும் முற்றாகச் சேதம்**

யாழ்ப்பாணம்.செப்.16

கடந்த மாதம் பதினொராம் திகதிக்குப் பின்னர் பளைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிபிர் விமானத் தாக்குதலில் அரச திணைக்களக் கட்டடங்களும், வர்த்தக நிலையங்களும் சேதமடைந்துள்ளன.

பளை மருத்துவமனைப் பகுதியில் வீழ்ந்த கிபிர் குண்டினால் கடந்த வருடம் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவமனைக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதாகவும்-

பளை நகரப்பகுதியில் வீழ்ந்து வெடித்த கிபிர் விமானக் குண்டுகளால் பிரதேச செயலகம், பிரதேசசபை, சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, பளை மத்திய கல்லூரி ஆகியவற்றின் கட்டடங்களும், நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் பலவும் சேதமடைந்துள்ளதாகவும் - தெரிவிக்கப்படுகிறது.

2000ஆம் ஆண்டில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின்போது சேதமடைந்த கட்டடங்கள் பல புதிதாக நிர்மாணிக்கப்பட்டு இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்ப் பகுதிகளின் மீள்கட்டமைப்பு, புனர்நிர்மாணம் ஆகியன இவ்வாறு மீண்டும் மீண்டும் சிதறுண்டு போவது கவலைக்குரியது என மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

(ப)

## புதிய மாணவர் உள்ளீர்ப்பு

யாழ்ப்பாணம்,செப்.16

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் தரம் 1, தரம் 6 வகுப்புக்கு புதிய மாணவர்கள் 2007ஆம் ஆண்டு சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

மிகச்சிறந்த பெறுபேறுகளை உடைய மாணவ, மாணவிகளுக்கு சிறந்த புலமைப் பரிசில்கள், கல்வி ஊக்குவிப்புக்கள் வழங்கப்படும்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி அதிபர் நோயல்.ஏ.விமலேந்திரன் இதைத் தெரிவித்தார்.

விண்ணப்பப் படிவங்கள் அடுத்த மாதம் 14ஆம் திகதிவரை வழங்கப்படும். (ப-95)

## மண்டான் உப்பு கடைகளில் விற்பனை

தென்மராட்சி.செப்.16

வடமராட்சி மண்டான் பகுதியில் பொதுமக்களால் அள்ளப்படும் உப்பு வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தற்போது ஏற்பட்டுள்ள அசாதாரண நிலையினால் பொதி செய்யப்பட்ட உப்புக்கு தட்டுப்பாடு நிலவுவதையடுத்து மண்டான் பகுதியில் இயற்கையாக விளைந்த உப்பு வர்த்தக நிலையங்களில் விற்பனை செய்யப்படுகிறது.

(ப-117)

## திறந்த பல்கலை கலைமாணி பிரவேச பரீட்சை இன்று

யாழ்ப்பாணம்,செப்.16

யாழ். திறந்த பல்கலைக்கழகத்தின் கீழ் கலைமாணி (சமூகவிஞ்ஞானம்) பிரவேசப் பரீட்சை இன்று சனிக்கிழமை இடம்பெறும். பரீட்சைக்கு விண்ணப்பித்த சகலரையும் இன்று காலை செங்குந்த இந்துக் கல்லூரிக்கு சமுகமளித்து பிரவேசப் பரீட்சையில் பங்குகொள்ளுமாறு பிராந்திய இயக்குநர் ச.ஆ. ஞானேந்திரன் கேட்டுள்ளார். விண்ணப்பதாரர் அனுமதி அட்டையுடன் சமுகம் தர வேண்டும். (ப-95)

## யாழ். நகரில் சைக்கிள் திருட்டு அதிகரிப்பு

அரியாலை,செப்.16

யாழ்.நகரில் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்துள்ளன.

நகருக்கு பொருள்களை கொள்வனவு செய்யவரும் மக்களின் சைக்கிள்கள் இவ்வாறு காணாமல் போவதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரி வீதி, கே.கே. எஸ் வீதி போனற பகுதிகளில் சைக்கிள்களை பூட்டிவிட்டு வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கு செல்லும் மக்களின் சைக்கிள்கள் இவ்வாறு களவாடப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பூட்டிய சைக்கிள்கள் களவாடப் படுவதால் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (17)

## விறகுக்கு பெரும் மவுசு

சுழிபுரம்,செப்.16

சுழிபுரம் பகுதியில் விறகுக்கு பெரும் மதிப்பு ஏற்பட்டுள்ளது. தேடுவோர் இல்லாமல் கிடந்த விறகுக்கு பெரும் விலைக்கு விற்கப்படுவதும் பலர் தூர இடங்களில் உள்ளவர்களுக்கு கொண்டுசென்று கொடுப்பதையும் அவதானிக்க முடிகிறது. எரிபொருளுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்கு முக்கிய காரணம். சிலர் தமது வளவுகளில் பட்ட மரங்களைத் தறித்து பணமாக்குவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். (ப-28)

## பொது நிர்வாகத்தில் முதுமாணிக் கற்கைநெறி

யாழ்ப்பாணம்,செப்.16

பொதுநிர்வாகத்தில் முதுமாணி கற்கை **(M.A.Public Adm.)** நெறிக்கான விண்ணப்ப படிவங்கள் வழங்கப்பட்டுவருகின்றன.

விண்ணப்பப் படிவங்களை யாழ்.பல்கலைக்கழக உயர்பட்ட பீடாதிபதி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முதன்முதலாக யாழ்.பல்கலைக்கழகத்தில் பொதுநிர்வாகத்தில் முதுமாணிக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் ஒக்ரோபர் மாதட 10 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளலாம்.

பொது நிர்வாகத்தில் ஏற்கனவே பட்டப்பின் டிப்ளோமா பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆங்கிலமொழி மூலம் ஒருவருடம் இடம்பெறவுள்ள மேற்படி கற்கைநெறிக்கு 2006 - 2007 கல்வியாண்டிற்கு 50 பேர் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுவர்.

இதுவரை பொதுநிர்வாகத்தில் முதுமாணி கற்கைநெறிக்கு 114 பேர் விண்ணப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ப-95)

# குருநகர் மீனவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் குடாக்கடலில் மீன்பிடிக்க அனுமதி

குருநகர்,செப்.16

குருநகர் மீனவர்கள் குடாக்கடலில் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்தில் மட்டுப்படுத்தப்பட்ட கடல் எல்லையில் காலை நேரங்களில் மீன்பிடிப்பதற்கு குருநகர் இறங்குதுறையில் உள்ள படையினர் அனுமதி வழங்கியுள்ளனர். இந்த அனுமதி நேற்று முன்தினம் வியாழக்கிழமை தொடக்கம் நடைமுறைக்கு வந்துள்ளது.

குருநகர் இறங்குதுறையில் இருந்து கிழக்குக் கடற்பகுதியில் இடையாடி என்ற கடற்பகுதி வரை மீன்பிடிக்கவே இந்த அனுமதி வழங்கப்பட்டது. ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட பின்னர் அனுமதிக்கப்படும் மீனவர்கள் முற்பகல் 11 மணிவரை மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்டனர். இதனைப் பயன்படுத்தி சிறு வலைகள் மூலம் இம் மீனவர்கள் மீன்பிடித்து வருகிறார்கள் எனவும் பிடிக்கப்படும் மீன் குறைவாக இருந்தாலும் இன்றைய நிலையில் அதிக விலைக்கு விற்கப்படுவதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர். நீண்ட தூர மீன்பிடித்தல் அனுமதிக்கப்படாததனால் பெரும் தொழில்களைச் செய்யமுடியாமல் உள்ளதாகவும் குருநகர் மீனவர்கள் தெரிவித்தனர். ஏற்கனவே குருநகர் இறங்குதுறையில் பண்ணைப் பாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் மீன்பிடிக்க படையினர் அனுமதி வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(ப-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை திறப்பு

உரும்பிராய் சந்தை ஆட்டிறைச்சிக்கடை இன்று சனிக்கிழமை காலை 7.30 இற்கு திறக்கப்படுகிறது.

1990இற்கு முன்பு உரும்பிராய், கோண்டாவிலில் 14 வருடம் கடை நடத்திய பழைய உரிமையாளர்களால் திறக்கப்படும்.

**(தற்போது புன்னாலைக்கட்டுவனில் இயங்கும் SAC ஜூனைட் உரிமையாளர்களினது)** (53738)

## கண்ணீர் அஞ்சலி

காரைநகர் வடக்கு அருள்மிகு மருதடி வீரகத்தி விநாயகர் ஆலய பொறுப்புரிமையாளர் சபை மூத்த அங்கத்தவர்

### அம்பலவாணர் கணபதிப்பிள்ளை

(புதுறோட், காரைநகர்)

அவர்கள் 09.09.2006 சனிக்கிழமை இறைவனடி எய்தியதையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல மருதடி அருள்மிகு வீரகத்தி விநாயகப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

**பொறுப்புரிமையாளர் சபை**
*மருதடி, காரைநகர்.* (53739) மருதடி வீரகத்தி விநாயகர் ஆலயம்.

## இதயம் நெகிழ்ந்த அஞ்சலிகள்

எமது சங்கத்தின் உறுப்பினரும்
சென்.ஜோன்ஸ் கல்லூரியின் புகழ்பூத்த அதிபருமான

### அமரர் எஸ்.தனபாலன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் கல்லூரி சமூகத்தினருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்ப்பாண கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கம்.**
(53732)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

*அன்னை மடியில்* 16 . 10 . 1979



*அநியாய அழிப்பில்* 07 . 09 . 2004

*திதி: நவமி*

### நவரத்தினராசா பிறேம்குமார் (பிறேம்)

*ஈராண்டு மறைந்ததையா*
*இரு விழிகள் கண்ணீர் காயவில்லை*
*தினம் தினம் உங்கள்*
*நினைவில் தவிக்கிறோம் ஐயா!*

(53726)

**புதிய செம்மணி வீதி,**
**வேளாதோப்பு, கட்டப்பிராய்.** **- மனைவி, பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

### *சின்னப்பு இராமலிங்கம்*

**(நெசில்ஸ் இராமலிங்கம்)**



ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் கைதடி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு இராமலிங்கம் (நெசில்ஸ் இராமலிங்கம்) அவர்கள் 14.09.2006 வியாழக்கிழமை பிற்பகல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னப்பு மாணிக்கம் அவர்களின் சிரேஸ்ர புதல்வரும் கார்த்திகேசு ஆசிப்பிள்ளையின் மருமகனும் நாகம்மாவின் அன்புக் கணவரும் யோகலிங்கம் (கனடா), கனகலிங்கம் (இந்தியா), துரைசிங்கம், துரைராஜா, பாலசிங்கம், ஜெயராசா (யாழ். போதனா வைத்தியசாலை), கமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் றோகினி(பிரான்ஸ்), அசோக்குமார் (பிரான்ஸ்), நந்தகுமார் (பிரான்ஸ்), சுபாஜினி(பிரான்ஸ்), மாலினி(கலாசார உத்தியோகத்தர், கோப்பாய் பிரதேச செயலகம்), விநோதகுமார் (காணி மாவட்டப் பதிவகம் கச்சேரி, யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சுப்பிரமணியம் மற்றும் இராசலெட்சுமி (இத்தாலி), அன்னம்மா, பாலசுந்தரம்(காணிமாவட்டப் பதிவகம் கச்சேரி, மன்னார்), காலஞ்சென்ற இராசசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் குமாரச்சந்திரன்(பிரான்ஸ்), ஞானகாந்தி, (பிரான்ஸ்), நாதா(பிரான்ஸ்), சிவகுமார்(பிரான்ஸ்), கிருஸ்ணானந்தன் (ஆசிரியர், யாழ்.இந்து மகளிர் கல்லூரி), அருணா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் தேனுகா, நுகல்யா, திவ்யா, அஜந்தன், பரிசிகா, இந்துரன், செந்தூரன், மயூரன், பிரியங்கா, துவாரகன், ஆர்திகன், அபிநயன், அனோயிதன், ஷப்தவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (16.09.2006) சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு நல்லூரிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மாயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல. 298, கோயில் வீதி,* தகவல்:
*நல்லூர்.* (53740) **இ.விநோதகுமார் (மகன்)**

# நல்லின விதைநெல் ரூ.2,500 வரை உயர்வு

யாழ்ப்பாணம்,செப்.16

வலி.தென்மேற்கில் பெரும்போக விதைப்புக்கு விவசாயிகள் தயாராகியுள்ளனர்.

எனினும் நல்லின விதை நெல் இல்லாமையினால் விவசாயிகள் பெரும் அல்லற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மானிப்பாய், நவாலி, சங்குவேலியில் நல்லின விதைநெல் ஒரு மூடை இரண்டாயிரத்து 500 ரூபாவில் இருந்து மூவாயிரம் ரூபாவரை விற்பனை செய்யப்படுகின்றது.

பெரியவெள்ளை, எச்.4, 500-1, இன நெல் என்பன பெரும் தட்டுப்பாடாகவுள்ளன. (ப-95)

# மானிப்பாய் வடக்கில் இன்று சமுர்த்தி முத்திரை

மானிப்பாய்,செப்.16

மானிப்பாய் வடக்கு (ஜே-137)கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்கு சமுர்த்தி உணவு முத்திரை இன்று காலை 9 மணிக்கு வழங்கப்படும்.

மானிப்பாய் வடக்கு கிராம அலுவலர் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என சமுர்த்தி அலுவலர் எஸ்.சதீஸ் அறிவித்துள்ளார்.

இதேவேளை நவாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதி மக்களுக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நவாலி வடக்கு ஹேமா இல்ல அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும்.

ஏற்கனவே சமுர்த்தி உணவு முத்திரைக்காக தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகள் நிவாரண அட்டை (பங்கீட்டு அட்டை), சமுர்த்தி அங்கத்தவர் கணக்குப் புத்தகம் (தனிக் கணக்கு) என்பவற்றை தவறாது கொண்டுவருமாறு நவாலி வடக்கு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் கேட்டுள்ளார். (ப-185)


## விஞ்ஞானமும் தொழில்நுட்பவியலும்

யாழ்., தென்மராட்சியில் பிரபலமான ஆசிரியரினால் தரம் 7 - 11 வகுப்புக்களுக்கு தனியாகவோ, குழுக்களாகவோ கற்பிக்கப்படும். O/L மாணவர்களுக்கு மீட்டல் வினாவிடை வகுப்புகள்.
தொடர்புகளுக்கு :- 123/2, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

♦ சாவகச்சேரி **Brighten Institute** வகுப்புகள் நடைபெறுகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள் தொடர்பு கொள்ளவும்.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள லிஸ்டர் எஞ்சின் (England) டைனமோ, 5Kw டைனமோ (China), வில்லியஸ் மாக் 12 எஞ்சின் 500w டைனமோ விற்பனைக்குண்டு.

தொடர்பு: *372, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.*
(53732)

**கிராமசேவகர் தரம் II**
**போட்டிப் பரீட்சைக்கான**
**பயிற்சி வகுப்புகள்**

ஆரம்பம் :- 17-09-2006 - 10 a.m.

★ மாணவர் வசதி கருதி நேர அட்டவணை தீர்மானிக்கப்படும்.
★ பாடக்குறிப்புக்கள் வழங்கப்படும்.

G.S., கணக்காளர் தரம் II, பட்டப்பின் டிப்புளோமா, கட்டற்றொழில் பரிசோதகர் படிவம் இங்கு கிடைக்கும்.

**திகழ் கல்வி நிறுவனம்,**
கே.கே.எஸ் வீதி, இணுவில்


# விதைப்பு வேலை சுழிபுரத்தில் மும்முரம்

சுழிபுரம்,செப்.16

சுழிபுரம் பறாளை வயல்களில் நெல் விதைப்புக்கான வேலைகள் மிகத் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.

மாட்டெரு மற்றும் குப்பைகள் ஏற்றிப் பறிப்பது, உழுவது போன்ற வேலைகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

சிலர் நெல் விதைப்பதையும் காண முடிகிறது. சுழிபுரம் பகுதியில்லுள்ள வயல்களில் நெல் விதைப்பு இவ்வாரத்தில் நிறைவு பெற்றுவிடும்.

சில கமக்காரர்கள் தண்ணீர் இறைத்து நிலத்தை ஈரமாக்கி நெல் விதைப்பையும் செய்து வருகின்றனர். (ப-28)


"ஊடகங்கள் அறிக்கைவிடுகின்றன
மக்கள் தீர்மானிக்கிறார்கள்"

## இது எந்தளவு உண்மையானது??

தேசிய சமாதானப் பேரவை சார்பில் டெனிஷ் டெவலொப்மன்ட் கோபரேசனின் (DANIDA) அனுசரணையுடன் YATV தயாரித்து வழங்குகின்ற 'ஊடக அறிக்கை' ஆவணச் சித்திரம் ஒளிபரப்பாகும்.

**ரீ.என்.எல்**

செப் 16 சனி இரவு 7.45 மணிக்கு (தமிழ்/சிங்களம்)

**இலங்கை தேசிய சமாதான பேரவை**
12/14 புராண விஹாரை றோட், கொழும்பு-6
ஈ.மெயில் - peace2@srilanka.net.
இணையத்தளம் - www.peace srilanka.org.


## 10 ஆம் ஆண்டின் நினைவலைகள்

மலர்ந்தது 01 . 10 . 1939



மடிந்தது 16 . 09 . 1996

### அமரர் பூதர் இரத்தினம்

*(ஓய்வுபெற்ற ஊழியர், காங்கேசன் சீமெந்து கூ.தாபனம்)*

*பண்பான எம் தெய்வமே!*
*பாசத்தின் பிறப்பிடமாய் எம்மை ஆளாக்கி*
*ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு மீளாத் துயில்கொண்டு*
*இன்றுடன் ஆண்டுகள் பத்து சென்றாலும்*
*அணையாதது எம் இதயம் - வணங்குகின்றோம்*
*உங்கள் ஆத்மா சாந்திபெற...*

(53695)

*துர்க்காமில் அருகில்,*
*பொன்னாலை வீதி,மானிப்பாய்.* **- குடும்பத்தினர்.**

## கண்ணீர் அஞ்சலி



### செல்வி அன்னலட்சுமி சின்னத்தம்பி

**(ஸ்தாபகர், வாழ்வகம்)**

நெருக்கடியான இக்காலகட்டத்தில் விழிப்புலனற்ற சிறார்கட்கு இல்லம் அமைத்து, அவர்கள் சமூகத்தில் ஏனைய பிரஜைகட்கு சமமாக வாழ வழிசமைத்து அச்சிறார்களின் உயர்விற்காக தன் வாழ்வை அர்ப்பணித்த உயர் இலட்சிய உத்தமிக்கு எமது இதயபூர்வமான அஞ்சலிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் இழப்பினால் துயருறும் வாழ்வக சமூகத்தினர்க்கும் அவரது உற்றார், உறவினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சம்பியன் லேன், கொக்குவில்.* **வளர்மதி நிறைவாழ்வகம்.**


## COMPUTER EXPRESS

Institute of Information Technology
*No 15, Sirampiyadi lane , Jaffna.*
Telephone :- 021-2228250 , 0777-222422

முதன்முறையாக தமிழ்மொழி விளக்கத்துடன் ஒருவாரகால முழுநேர

**DIPLOMA IN HARDWARE ENGINEERING**
Course fee :- 2000/=

**DIPLOMA IN VIDEO MIXING**
Course fee :- 3000/=

**free study pack & drive CD**

**DIPLOMA IN GRAPHICS DESIGNING**
Course fee :- 2000/=

**Diploma in Computerized Accounting**
Course Fee: 3500/=

**கற்கைநெறியின் நன்மைகள் :-**

- பாடநெறியின் இறுதியில் 100% பூரண அறிவைப் பெற்றுக்கொள்வதற்கான உத்தரவாதம்
- கம்பூட்டரின் உட்தொழினுட்பம் பற்றி பூரண அறிமுகம் செய்வதால் கம்பூட்டர் தொடர்பான முன்னறிவு அவசியமில்லை.
- தராதரமும் நீண்ட அனுபவமும் கொண்ட விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றது.
- 100% செய்முறைப் பயிற்சிகளுடனான விரிவுரைகளிற்கு உத்தரவாதம்.

**வகுப்புகள் ஆரம்பம் :- 18-09-2006 : 09.00**

ஏனைய அனைத்து கற்கைநெறிகளிற்கானபுதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றது
Batch I :- 17/09/2006, Batch II :- 20/09/2006
Batch III :- 22/09/2006, Batch IV :- 23/09/2006


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி, தொலைநகல் - 222 9944, 222 9933, 222 3837

## பேச்சுக்கு இணங்குவதைத் தவிர தென்னிலங்கைக்கு வழி இல்லை

நிபந்தனையற்ற பேச்சுக்களை அரசும், புலிகளும் உடனடியாக - விரைந்து - ஆரம்பிக்க வேண்டும் என்று இணைத் தலைமை நாடுகள் அறிவித்து - வற்புறுத்தி - வலியுறுத்தி - நிற்கின்றன.

அந்த அறிவிப்பு தென்னிலங்கையில் பெரும் சீற்றத்தையும், முணுமுணுப்பையும் வெளிப்படுத்தியுள்ளது.

நிபந்தனையற்ற பேச்சை ஆரம்பிக்கக் கோரும் இணைத் தலைமை நாடுகளின் மேற்படி அறிக்கை - அறிவிப்பு - வெளியாகி பன்னிரண்டு மணித்தியாலங்களுக்குள், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் நெருங்கிய தோழமைக் கட்சியான ஜே.வி.பி. விரைந்து கொண்டு தனது பிரதிபலிப்பை வெளிப்படுத்தியது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடாதவரை அந்த அமைப்புடன் பேச்சு நடத்துவதற்கு அரசு இணங்கவே கூடாது என்று ஜே.வி.பி., பத்திரிகையாளர் மாநாடு நடத்திப் பகிரங்கமாக அறிவித்தது.

உடனடியாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நேரில் சந்தித்து அக்கருத்தை அவரிடம் அது வலியுறுத்தியும் கூறியது.

அதன் பின்னர், அதேபோன்ற கருத்து இலங்கைப் பிரதமரிடமிருந்து வந்திருக்கின்றது. அதுவும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெளிநாடு சென்றிருக்கையில் - அவரின் பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பைத் தாம் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில் - ஜனாதிபதிக்கு அடுத்த நிலையில் உள்ள அரசுத் தலைவரான பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க பகிரங்கமாக அதை விடுத்திருக்கின்றார்.

*''சமாதானப் பேச்சுகளை உடன் ஆரம்பிக்க வேண்டுமானால் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க வேண்டும். ஆயுதங்களைக் கீழே வைக்காமல் சமாதானப் பேச்சு சாத்தியமே ஆகாது. சமாதானப் பேச்சுகளை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி, புலிகள் தங்களைப் பலப்படுத்திக் கொள்ள அனுமதிக்க முடியாது. புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்காத நிலையில், பேச்சுகளை ஆரம்பித்து நாம் கயிறை விழுங்க முடியாது.''* - என தென்னிலங்கையில் நடைபெற்ற ஒரு பொது நிகழ்வில் பகிரங்கமாகவும், திட்டவட்டமாகவும் தெரிவித்திருக்கின்றார் பிரதமர்.

இதேசமயம், அரசுப் பேச்சுக் குழுவின் தலைவரும், அமைச்சருமான நிமால் சிறிபால டி சில்வாவும், வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பாலிககாரவும், கொழும்புக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரைச் சந்தித்து, பேச்சுக்கான முன்நிபந்தனைகள் சிலவற்றைத் தெரிவித்திருக்கின்றனர் என்ற சாரப்பட செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது இயக்கம் பேச்சுக்களைப் பயன்படுத்தி கொலை நடவடிக்கைகளைத் தொடராது என எழுத்து மூலம் அரசுக்கும், அனுசரணைத் தரப்பான நோர்வேக்கும், இணைத் தலைமை நாடுகளுக்கும் உறுதியளிக்க வேண்டும் என அவர்கள் இருவரும் வற்புறுத்தியிருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

அதேவேளை, உத்தேசப் பேச்சுக் காலத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி ஆயுதங்களையும், இராணுவத் தளபாடங்களையும் வாங்கிச் சுவீகரிப்பதற்குப் புலிகள் முனைவதைத் தடுக்கும் ஏற்பாட்டை இணைத் தலைமைகளும், சர்வதேச சமூகமும் உறுதிப்படுத்த வேண்டும் என அரசு எதிர்பார்ப்பதாக அரசின் சமாதானச் செயலக அறிக்கை கூறுகின்றது.

ஆக -

நிபந்தனையற்ற பேச்சுக் குறித்து இணைத் தலைமைகள் மூச்சு விட்டதும் -

புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்; கொலைகளைத் தாங்கள் நிறுத்துவார்கள் என எழுத்து மூலம் புலிகள் உறுதிதர வேண்டும்; சமாதான காலத்தில் புலிகள் ஆயுதங்களை வாங்கிச் சுவீகரித்துத் தம்மைப் பலப்படுத்தமாட்டார்கள் என்று உறுதிப்படுத்த வேண்டும் - என்றெல்லாம் முன் நிபந்தனைகள் கொழும்பிலிருந்து வரத் தொடங்கி விட்டன.

ஆனால், இந்த முன்நிபந்தனைகள் எல்லாம் காற்றோடு போகுமா அல்லது அவற்றில் அரசுத் தரப்பு உறுதியாக நிற்குமா என்பது தெரியவில்லை.

அதேவேளை -

முன்னைய ஆறு சுற்றுப் பேச்சுகளையும் எதிர்காலப் பேச்சுக்கான அடிப்படைகளாக ஏற்றுக் கொள்ள வேண்டும், ஜெனிவா இணக்கப்பாட்டை முழு அளவில் நடைமுறைப்படுத்தும் விதத்தில் துணைப் படைகளின் ஆயுதங்களை அரசுத் தரப்பு களைய வேண்டும், யுத்த நிறுத்த உடன்பாட்டு எல்லை வரையறைகளின்படி மாவிலாறு, சம்பூர் பகுதிகளைக் கைவிட்டு பழைய நிலைகளுக்கு அரசுப் படைகள் திரும்ப வேண்டும் என்றெல்லாம் விடுதலைப் புலிகள் தரப்பும் முன் நிபந்தனைகளை விதிக்குமா என்பதும் தெரியவில்லை.

ஆனால், ஏதேனும் ஒரு தரப்பு அல்லது இரு தரப்புகளுமே முன் நிபந்தனைகள் விதித்து, அதன் காரணமாகப் பேச்சு சாத்தியப்படாமல் போனால், இணைத் தலைமைகள் தமது அறிக்கையில் அறிவுறுத்தியிருப்பது போல - அச்சுறுத்தியிருப்பது போல - சர்வதேச சமூகத்தின் உதவி தடைப்பட்டுப் போகும் சாத்தியம் ஏற்படும்.

இன்றைய நிலையில் சர்வதேச சமூகத்தின் உதவி தடைப்பட்டால் பெரிதும் பாதிக்கப்படக் கூடியது இலங்கை அரசுத் தரப்புத்தான்; புலிகள் தரப்பல்ல. ஏற்கனவே பல நாடுகளில் தடைசெய்யப்பட்ட புலிகளுக்கு எதிராக சர்வதேச சமூகம் இனிமேலும் - இதற்கு மேலும் - மோசமான நடவடிக்கைகளை எடுக்க வாய்ப்புகள் குறைவு அல்லது இல்லை.

ஆக, உதவிகள் தடைப்படும் என்ற அறிவுறுத்தல் இலங்கை அரசுக்கே சிக்கலான விவகாரம். அப்படி நேர்ந்தால் இலங்கை அரசின் உயிர்ப்புக்கான பிரதான விநியோக ஆளியே - பாதையே - துண்டிக்கப்பட்டு விடும். சர்வதேச உதவி தடைப்பட்டால் அடுத்த ஓரிரு மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரவு - செலவுத் திட்டத்தைக் கூட தயாரிக்க முடியாமல் அரசு திண்டாட வேண்டி நேரிடும். அதுதான் யதார்த்தம்.

ஆக முன் நிபந்தனையற்ற பேச்சுக்கு மறுப்பது போல அரசுத் தரப்பு முறுகினாலும் - முணுமுணுத்தாலும் - முரண்டு பிடித்தாலும் - இறுதியில் அவ்விடயத்தில் அடங்கிப் போவது ஒன்றே அரசுக்குள்ள ஒரே மார்க்கமாகும்.

இணைத் தலைமைகள் தற்போது விடுத்துள்ள நிபந்தனையற்ற பேச்சு என்ற அழைப்புக்குப் புலிகள் சாதகமாகக் கோடி காட்டுவார்கள் என்றால் -

வெளியே தென்னிலங்கை அரசியல் களத்தைச் சமாளிப்பதற்காக, ஏதோ புலிகளுக்கு நிபந்தனை விதிப்பவர்கள் போல அரசியல் 'பிகு' பண்ணிக் கொண்டு பேச்சுக்காக நோர்வேக்கு பெட்டி கட்டிக் கொண்டு புறப்படுவதுதான் அரசுத் தரப்புக்குள்ள ஒரே வழி. சூழ்நிலை நிர்ப்பந்தம் அப்படித்தான் உள்ளது.

# தமிழர் கடத்தல், கொலைகளுக்கு அரசும் அதிகாரிகளுமே பொறுப்பு

## பாதுகாப்புத் தரப்பினர் மீது மகேஸ்வரன் பாய்ச்சல்

கொழும்பு, செப்.16

இலங்கைத்தீவு எங்கும் தமிழர்கள் வகைதொகையின்றி கடத்தப்படுவதற்கும், படுகொலை செய்யப்படுவதற்கும், அவர்கள் வன்முறை அராஜகங்களுக்கு உட்படுத்தப்பட்டு அவலப்படுத்தப்படுவதற்கும் இந்த அரசும், பாதுகாப்பு உயரதிகாரிகளுமே பொறுப்பு. இதற்கு அவர்கள் பதில் சொல்லியேயாக வேண்டும்; பொறுப்புக் கூறியேயாக வேண்டும்.

- இவ்வாறு பாதுகாப்பு உயரதிகாரிகளை நேரடியாக - காட்டமாக - வைதிருக்கிறார் கொழும்பு மாவட்டத் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரான ரி.மகேஸ்வரன்.

உயர் பாதுகாப்பு அதிகாரிகளின் முகத்தில் அடித்தாற்போல இவ்வாறு குற்றம் சுமத்திய மகேஸ்வரன் எம்.பி., அரசியல்வாதிகளின் இழுப்புகளுக்கு எடுபட்டு தமிழர்களுக்கு எதிரான இத்தகைய கொடூரத்துக்குத் துணைபோகும் படை அதிகாரிகள் அக்குற்றங்களிலிருந்து இலகுவில் தப்பமுடியாது என்றும் எச்சரித்தார்.

பாதுகாப்பு அமைச்சில் நேற்று நடைபெற்ற உயர் மட்டக்கூட்டம் ஒன்றிலேயே இவ்வாறு அடக்க முடியாமல் சீறிப் பாய்ந்தார் மகேஸ்வரன் எம்.பி.

இலங்கைத் தீவில் அரச கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் வன்முறைகள் குறித்து, பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று உரையாடினர்.

இந்த உரையாடலில் ஜனாதிபதியின் ஆலோசகரும், சகோதரருமான பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதியின் மற்றொரு சகோதரரும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளருமான கோட்டபாய ராஜபக்ஷ, பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ மற்றும் பொலிஸ் உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

தமிழர் தரப்பில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெ. சந்திரசேகரன், பிரதி அமைச்சர்களான முத்து சிவலிங்கம், பி. இராதாகிருஷ்ணன், எம். சச்சிதானந்தன், எம்.பிக்களான எம்.எஸ். செல்லச்சாமி, எஸ். ஜெகதீஸ்வரன், தி.மகேஸ்வரன், மனோ கணேசன் மற்றும் மத்திய மாகாண சபை உறுப்பினர் எஸ்.மதிமுகராஜா, ஈ.பி.டி.பியைச் சேர்ந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி. தவராஜா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

### இந்த அரசு பதவிக்கு வந்த பின்னரே....

அங்கு தாம் தெரிவித்த விடயங்கள் குறித்து மகேஸ்வரன் எம்.பி. வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

''இந்தப் பாதுகாப்புச் செயலாளர் பதவியேற்ற பின்னர் இதுவரை யாழ்ப்பாணத்தில் மட்டும் 419 பேர் காணாமல்போயிருக்கின்றனர். வெள்ளை வானில் ஊரடங்கு வேளையில் வருவோரால் தினசரி ஆள்கள் கடத்தப்படுகின்றனர். பின்னர் ஆங்காங்கே அவர்கள் சுட்டுப் பிரேதங்களாகப் போடப்படுகின்றார்கள்.

மட்டக்களப்பு, திருகோணமலை, புத்தளம், வவுனியா போன்ற இடங்களிலும் இதே கதிதான். வவுனியாவில் நிலைமை இன்னும் மோசம்.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் தான் இந்த அட்டூழியங்கள் எல்லாம். எமது ஐ.தே.க. அரசில் இப்படித் தமிழர்களுக்கு எதிரான கொடூரங்கள் திட்டமிட்டு இடம்பெறவில்லை.

இப்போது தமிழர்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் அராஜகங்களுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பொறுப்புக் கூறியேயாக வேண்டும்.

அப்பாவித் தமிழர்களைக் கைது செய்து தடுப்பு முகாம்கள் என்ற பெயரில் கொழும்பு, தெமட்டகொட, 4ஆம் மாடி, பலாலி, பூஸா, பனாகொட என்று பல இடங்களில் - பெற்றோருக்குக் கூடக் காட்டாமல் - தடுத்து வைத்திருக்கிறீர்கள்.

பாதுகாப்பு உயர் மட்டத்தில் இருப்போர் அரசியல் நியமனங்களில் வந்தவர்கள். அரசுகள் கவிழ, அதிகாரங்கள் கைமாற, அவர்களும் மாற வேண்டியதுதான். இதை அதிகாரிகள் புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் அதிகாரத்தில் இருப்பவர்களுக்கும், அவர்களால் அரசியல் நியமனங்கள் வழங்கப்பட்டவர்களுக்கும் பயந்து, தலையாட்டி, அராஜகங்களுக்குத் துணைபோகும் அதிகாரிகள் ஏதோ ஒரு கட்டத்தில் அக்குற்றங்களுக்குத் தாங்கள் பொறுப்பேற்க வேண்டி வரும் என்பதை சிந்தித்துப் பார்ப்பது நல்லது.

இப்போதைய அரசுக்கு மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. அடுத்த வருடமும் இந்த அரசு கவிழலாம். ஆட்சி மாற்றம் வரலாம். அப்போது பாதுகாப்புத் துறையின் அரசியல் நியமனங்கள் 'அவுட்'டாகி விடும். ஆனால், அதிகாரிகள் இருப்பார்கள். பொறுப்பேற்க வேண்டியிருக்கும்.

இப்போது தமிழர்களுக்கு எதிரான குற்றங்களுக்குத் துணைபோன அதிகாரிகளுக்கு அவர்கள் ஓய்வுபெற்றாலும் நாங்கள் ஆட்சிக்கு வந்ததும் குற்றப் பத்திரங்களை நீட்டுவோம்.

இன்னும் மூன்று மாதத்தில் ஓய்வு பெறப்போகும் பொலிஸ்மா அதிபர் உட்பட அனைவரும் இதைச் சிந்திப்பது நல்லது. அரசியல் அதிகாரங்களுக்குத் தவறாகத் துணைபோய் குற்றவாளியாகாதீர்கள்.

### மனித உரிமைகள் குறித்த கண்காணிப்பு

இன்று உலகம் மாறிவிட்டது. மனித உரிமைகள் தொடர்பான கண்காணிப்புத் தீவிரமாகிவிட்டது. முழு உலகமுமே இங்கு நடக்கும் அராஜகங்களைக் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டு பார்த்து நிற்கின்றது. எந்தெந்த அதிகாரிகளின் பிரதேசங்களில் என்னென்ன குற்றங்கள் நிகழ்கின்றனவோ அவற்றுக்கு அந்த அதிகாரிகள் பொறுப்புக் கூறாமல் தள்ளி நிற்க முடியாது.

நாங்கள் புலிகளுக்காகவோ, புலிச் சந்தேக நபர்களுக்காகவோ, கிளைமோர் வைப்பவர்களுக்காகவோ இங்கு பேசவரவில்லை. அப்பாவித் தமிழர்கள் அனைவரையும் புலிகளாகக் கருதி நீங்கள் புரியும் அராஜகங்களுக்கு எதிராகவே பேச வந்திருக்கிறோம்.

பாதுகாப்பு உயரதிகாரிகளைத் திருப்திப்படுத்துவதற்காகப் படையினரையோ, பொலிஸாரையோ குறைகூறாமல், நாம் வாய்மூடி இருக்க முடியாது. எமது கருத்தை - நாம் கூறும் உண்மைகளை - செவிமடுக்க விரும்பாவிட்டால் நீங்கள் எழுந்து போகலாம். உங்களைத் திருப்திப்படுத்துவதற்காக நாம் மௌனம் சாதிக்க முடியாது.

புலிகளுடன் சண்டை பிடியுங்கள், அதற்காக கருணாவுக்குப் பாலூட்டுங்கள். அவர்களின் முகாமை வைத்திருங்கள். அதெல்லாம் எங்களுக்குப் பிரச்சினை இல்லை. கருணா குழுவையும், புலிகளையும் மோதவிட்டு வேடிக்கை பாருங்கள். அதுவும் எமக்கு விவகாரம் அல்ல.

ஆனால், இங்கிருக்கும் அப்பாவிகளைக் கடத்திக் கொண்டு போய் ஒரு கோடி, இரண்டு கோடி, மூன்று கோடி, நான்கு கோடி ரூபா என்று கப்பம் வேண்டிய பின்னர், அவர்களை கருணா முகாமிலிருந்து விடுவிப்பதைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்காதீர்கள்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## மின் விநியோகம் இன்றுமுதல் ஒருமணி நேரம் மட்டுமே

யாழ்ப்பாணம்,செப்.16

குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் இன்று தொடக்கம் ஒரு மணித்தியாலத்திற்கே சுழற்சி முறையில் மின்சாரம் வழங்கப்படும் என அறியப்படுகின்றது.

இதன் பிரகாரம் யாழ். நகரப்பகுதி அடங்கலாகவும் இரவு 8.30 மணி தொடக்கம் 9.30 மணிவரையும், கோம்பையன்மணல் மின்மாற்றியூடாக மின் விநியோகம் பெறும் யாழ். நகரை அண்டியுள்ள கரையோரப் பகுதிகளுக்கு இரவு 6.30 மணிதொடக்கம் 7.30 மணிவரைக்கும் மின்விநியோகம் வழங்கப்படும் என்று நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

ஏனைய பிரதேசங்களுக்கும் ஒரு நாளைக்கு ஒருமணிநேரமே மின்சாரம் சுழற்சிமுறையில் வழங்கப்படும் என்று தெரியவந்தது. கடந்த சில தினங்களாக நாளொன்றுக்கு சுமார் 4 மணித்தியாலங்கள் வழங்கப்பட்டு வந்த மின்சாரம் வியாழக்கிழமை மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட நேரத்திற்கே விநியோகிக்கப்பட்டது.

நேற்றிரவு நகரின் பல பகுதிகளுக்கும் எட்டு மணிதொடக்கம் 9 மணி வரைக்குமே மின்விநியோகம் இடம்பெற்றது. ஏனைய சில இடங்களுக்கு 8.30 மணிதொடக்கம் 9.30 மணிவரைக்கும் என்று வெவ்வேறு நேரங்களில் வழங்கப்பட்டது.

வியாழனன்று மட்டுப்படுத்தப்பட்ட மின்விநியோகம் நேற்று வெள்ளிக்கிழமை 4 மணிதொடக்கம் 6 மணிவரையான அட்டவணைப்படி முந்திய நிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இனிமேல் ஒருமணிநேரம் சுழற்சிமுறையிலான விநியோகமே நடைபெறும் என்று நம்பிக்கையாக அறியவருகின்றது. (அ-1)

# நீடித்த சமாதானத்தை அடைவதற்கு சர்வதேசம் அழுத்தம் தரவேண்டும்

## பல்கலை மாணவர் ஒன்றியம் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,செப்.16

நிபந்தனையற்ற சமாதானப் பேச்சு வார்த்தைக்கு அரசும், விடுதலைப் புலிகளும் இணங்கியுள்ளதாக இணைத் தலைமை நாடுகள் அறிவித்திருப்பதை வரவேற்கின்றோம். இந்த அறிவிப்பு நீடித்த, நிலையான சமாதானத்தை நோக்கிச் செல்ல சர்வதேச சமூகம் தனது அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுகிறோம்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று விடுத்த அறிக்கையில் இவ்வாறு வலியுறுத்தப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இனப்பிரச்சினைக்கு சமாதான வழிகளில் தீர்வு காணப்படவேண்டும் என்பதிலே எமது பல்கலைக்கழகச் சமூகம் என்றும் அக்கறையோடு உள்ளமையைத் தெரிவித்துக்கொள்வதோடு, சமாதானத் தீர்வு நோக்கிய பயணத்தில் அனைத்துத் தரப்பினரும் இதயசுத்தியோடு பயணிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றோம்.

இதன் காரணமாக யாழ். குடாநாடு உள்ளடங்கலாக இலங்கையின் அனைத்துப்பாகங்களுக்கும் பரவியுள்ள படுகொலைகள், ஆள்கடத்தல்கள் உடனடியாகத் தடுத்துநிறுத்தப்படவேண்டிய தேவை உள்ளது. அத்தோடு, யுத்தநிறுத்த நடைமுறைகள் செம்மையாக அமுல்படுத்தப்படவேண்டும். அப்பாவி மக்கள்மீதான படுகொலைகள், கடத்தல்களுடன் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளைச் சட்டத்தின்முன் நிறுத்தவேண்டும்.

தற்போதைய நெருக்கடிச் சூழ்நிலையில் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ள குடாநாட்டு மக்களது வாழ்வானது இயல்புசூழல் ஏற்படுத்தப்பட்டு பாதுகாப்பும் உறுதி செய்யப்படவேண்டும்.

சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பணியும் உரிய வகையிலே பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைவதை சர்வதேச சமூகம் உறுதிசெய்யவேண்டும் என கேட்டுக்கொள்வதோடு, நிலையான சமாதானத் தீர்வை சிவில் சமூகம் சார்பிலே எதிர்பார்த்தும் உள்ளோம் - என்று உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கியூபாவின் தலைநகர் ஹவானாவில் நடைபெறும் அணிசேரா நாடுகள் மாநாட் டில் கலந்துகொள்ளச் சென்ற ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவரது மனைவி ஆகியோரை ஹவானா ஜோஸ் மார்டி சர்வதேச விமானநிலையத்தில் வைத்து கியூபாவின் நிதி அமைச்சர் ஜியோகினா பரிரோ அம்மையார் மற்றும் அதிகாரிகள் வரவேற்று அழைத்துச் செல்கின்றனர்.

# போர்நிறுத்த உடன்படிக்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வில் பேச்சு நடத்துவதற்கு நீங்கள் எந்தவித நிபந்தனையும் இன்றி ஒத்துக்கொண்டீர்கள் என்று நோர்வே கூறியுள்ளது. இது சரியா?

*பதில்:* அதுபற்றித் தெளிவாகத் தமிழ்ச்செல்வன் அவர்கள் கூறியிருக்கிறார். எங்களைப் பொறுத்தளவில் ஏற்கனவே, இருக்கின்ற அந்த யுத்தநிறுத்த உடன்படிக்கையானது நிறைய விடயங்களைச் சொல்லுகின்றது. அந்த யுத்தநிறுத்த ஒப்பந்தம் இப்போது அமுலில் இருக்கின்றதா என்பதை இலங்கை அரசிடம் கேட்டுச்சொல்லும்படி நாங்கள் முதலில் சொல்லியிருக்கின்றோம்.

அப்படி அவர்கள் சொல்லுவார்களாக இருந்தால், அப்படி அவர்கள் நடப்பார்களாக இருந்தால், தொடர்ந்து சமாதான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் எங்களுக்குத் தடங்கல்கள் இல்லை எனவும் சொல்லியிருக்கின்றோம்.

*கேள்வி:* எந்தவித நிபந்தனையுமின்றி புலிகள் பேச்சுக்கு சம்மதம் தெரிவித்திருப்பதாக நோர்வேத் தரப்பினர் தெரிவிக்கின்றனர். அதற்கு உங்கள் பதில் என்ன?

*பதில்:* அவர்கள் எங்களுடைய அந்த நிரந்தரமான நிலைப்பாட்டை - ஜெனிவா உடன்படிக்கைக்கான நிரந்தரமான நிலைப்பாட்டை - அவர்கள் அங்கு தெரிவித்துள்ளார்கள்.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பது இங்கு நடைமுறையில் இருக்கின்ற ஒரு விடயம். பேச்சுவார்த்தை அதன் அடிப்படையில்தான் அமையவேண்டும். அந்த அடிப்படையில் பேசப்படவேண்டும் என்றுதான் நாங்கள் கூறிக்கொண்டிருக்கிறோம்.

*கேள்வி:* நீங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைப் பற்றிப் பேசுகிறீர்கள். நோர்வேத்தரப்பு மிகத் தெளிவாக எவ்வித - நிபந்தனையுமின்றி - நீங்கள் பேச்சுக்குவர சம்மதம் தெரிவித்ததாகக் கூறுகிறதே?

*பதில்:* அதிலே நிச்சயமாக முரண்பாடு இல்லை. ஏனெனில் பேச்சுவார்த்தை என்பது ஏற்கனவே நடந்துகொண்டிருந்த பேச்சுக்களின் தொடர்நிகழ்வாகவே இருக்கமுடியும்.

ஏற்கனவே நடந்துகொண்டிருந்த பேச்சுகளுக்கு ஓர் அடித்தளம் இருக்கின்றது. அதுதான் போர்நிறுத்த ஒப்பந்தம். அதனுடைய தொடராகவே இந்தப் பேச்சுகள் நடக்கும் ஒரு சூழ்நிலை ஏற்பட வேண்டும். அதுதான் எமது அரசியல்துறைப் பொறுப்பாளரின் வேண்டுகோள்.

*கேள்வி:* சில நாட்களுக்கு முன்பு சம்பூரை விட்டு இராணுவம் விலகும்வரை பேச்சுவார்த்தைக்கு சாத்தியம் இல்லை என்று கூறினீர்களே. இன்னும் இராணுவம் அங்கு அப்படியே இருக்கின்றதே. இந்நிலையில் பேச்சு எந்தளவிற்கு சாத்தியமாகும்?

*பதில்:* யுத்தநிறுத்த ஒப்பந்தம் என்பது முழுமையாக நூறுவீதம் கடைப்பிடிக்கப்படுகின்ற ஒரு தருணத்தில் மட்டும்தான் இனிமேல் எவ்வகையான ஒரு பேச்சுவார்த்தையும் அமைய முடியும்.

*கேள்வி:* நீங்கள் பேச்சுக்கு போகின்றீர்களா? இல்லையா?

*பதில்:* போர்நிறுத்த ஒப்பந்தம் நூறுவீதம் கடைப்பிடிக்கப்பட்டு அந்த ஒப்பந்தத்தின் அத்தனை விடயங்களும் அமுல்படுத்தப்பட்டு ஜெனிவாவிலே கொழும்பு நிர்வாகம் எமக்களித்த வாக்குறுதிகள் - சர்வதேச சமூகத்துக்கு அளித்த வாக்குறுதிகள் - நடைமுறைப்படுத்தப்படுத்தப்படும் பட்சத்தில் அதுதொடர்பாக நாங்கள் தெளிவான ஒரு விளக்கத்தைத் தருவோம்.

*கேள்வி:* தற்போது அரசுத் தரப்பினர் சம்பூர் பகுதியைக் கைப்பற்றியுள்ளனர். முகமாலைப் பகுதியிலும் முன்னேறியுள்ளனர். இந்தநிலையில் நீங்கள் சொல்லுகின்ற சூழ்நிலை தற்போது நிலவவில்லை. ஆகவே, நீங்கள் பேச்சுக்கு போவீர்களா?

*பதில்:* பேச்சுவார்த்தை எந்தச் சூழ்நிலையில் அமைய முடியும் என்பதை எமது அரசியல்துறைப் பொறுப்பாளர் அவர்கள் மிகவும் தெளிவாகச் சொல்லியுள்ளார். அதைத்தான் இன்றும் கண்காணிப்பாளர்களுக்கு எமது தரப்பால் சொல்லப்பட்டுள்ளது. (ஐ-12)

# மனிதாபிமான நெருக்கடியை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டியதன் அவசியத்தை கண்காணிப்புக் குழுத் தலைவர் நன்கு உணர்ந்திருக்கிறார். பாதையைத் திறப்பதற்குத் தன்னால் முடியுமான அளவு காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கப் போவதாக என்னிடம் அவர் கூறியிருக்கிறார் என்றும் தமிழ்ச்செல்வன், தெரிவித்தார்.

இந்தச்சந்திப்பின்போது தமிழ்ச்செல்வனுடன் விடுதலைப் புலிகளின் காவல் துறைப் பொறுப்பாளர் பா. நடேசனும் உடனிருந்தார்.

புதிய கண்காணிப்புக் குழுத் தலைவருடன் நடந்த பேச்சுக் குறித்து ஊடகவியலாளரிடம் தமிழ்ச்செல்வன் மேலும் கூறியதாவது:-

வகை தொகையின்றி மக்கள் கொல்லப்படுகிறார்கள். இடம்பெயர்ந்த மக்கள் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள். ஆள்கள் காணாமல் போகும் சம்பவங்கள் அதிரவைக்கும் வேகத்தில் நடக்கின்றன. இவற்றிற்கு எல்லாம் மேலாக, பொருளாதாரத் தடை ஒன்றையும் அரசு அமுல்படுத்தி வருகிறது. இதனால், மக்களுக்கு வேண்டிய அத்தியாவசிய உணவுப் பண்டங்கள், மருந்துவகைள் கிட்டாதவாறு தடுக்கப்பட்டுள்ளன என்பதையும் நாங்கள் கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு விவரமாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை நூற்றுக்கு நூறு வீதம் மதிப்பளிக்கப்பட வேண்டும். இவ்வாறு மதிப்பளிக்காமல், மக்களின் பாதுகாப்பையோ, பந்தோபஸ்தையோ உறுதிப்படுத்த முடியாது என்பதையும் எடுத்துக் கூறியிருக்கிறோம்.

ஜனாதிபதி ஒன்றைச் சொல்லுகிறார். பிரதமர் வேறு ஒன்றைக் கூறுகிறார். அரசுப் பேச்சாளர் பிறிதொன்றைத் தெரிவிக்கிறார். எல்லாம் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடானதாகவே உள்ளன. இலங்கை அரசின் நிலைப்பாடு என்ன என்பதையும் தெட்டத்தெளிவாக அறிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது. ஆனால், ஒன்றுமட்டும் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதாவது, அரசு யுத்தப் பாதையிலேயே செல்லவிருக்கிறது. அதற்காகத் தமிழர் தாயகத்தில் பல யுத்த முனைகளை அரசு திறந்து வைத்திருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

# தமிழர் கடத்தல், கொலைகளுக்கு....

(05ஆம் பக்கத் தொடர்ச்சி

அதற்கு உடந்தையாக இராதீர்கள் என்பது எமது கருத்து.

''எங்களால் உதவி செய்ய முடியாது. நீங்களே உங்கள் ஆள்களிடம் அறவிட்டுக் கொள்ளுங்கள்!'' என்ற அறிவுரை அதிகார அரச உயர்பீடத்தால் சம்பந்தப்பட்டோருக்கு வழங்கப்பட்டிருப்பதாகவும் -

அந்த ஆணையின் அடிப்படையில்தான் கப்பம் கேட்டுக் கடத்தும் அராஜகம் அரங்கேறுவதாகவும் கூடப் பேச்சடிபடுகின்றது.

**அராஜகங்களுக்குத் துணை போகமுடியாது**

கடத்தப்பட்ட சிலர் பல கோடி கப்பம் செலுத்திய பின்னரும் விடுவிக்கப்படவில்லை. பணத்தை அறவிட்டுக்கொண்டு அவர்களைக் கொலைசெய்து விட்டார்கள் போலும்.

இக்கடத்தல் கொடூரம் தொடங்கியதும் ஜனாதிபதியிடம் ஓடிய சில அரசியல்வாதிகள், புலிகளுக்கும், யாழ். தமிழர்களுக்கும் தான் தொடர்பு, கொழும்பு மற்றும் மலையக வர்த்தகர்களின் மீது கைவைக்க அனுமதிக்க வேண்டாம் என்று மன்றாடினர் என்றும் தகவல்.

கொழும்பு, மலையக வர்த்தகர்கள் மீது மட்டுமல்ல, வன்முறைகளுடன் தொடர்பற்ற எந்த வர்த்தகர்களுடனும் - அப்பாவிகளுடனும் - விளையாட இடங்கொடாதீர்கள் என்பதுதான் எமது கோரிக்கை.

கொழும்பில் விசாரணை தொடங்கியதும் கிளிநொச்சிக்குக் காவடி எடுத்து, பின்னர் புலிகளைக் காட்டி பதவிகளைப் பெற்றுக் கொண்ட அரசியல் தலைமைத்துவங்களும் இருக்கலாம். அவை தமிழர்களுக்கு எதிரான அராஜகங்களை பிரதேச ரீதியாக வேறுபடுத்தி ஒரு பகுதி ஆள்களை மட்டும் காப்பாற்ற முயலலாம்.

எமது கோரிக்கையும், வற்புறுத்தலும் அது வல்ல. தமிழர்கள் - அவர்கள் குற்றங்களுடன் தொடர்பற்ற அப்பாவிகள் எனின் - அவர்கள் யாருடனும் விளையாடாதீர்கள். அத்தகைய அப்பாவிகளை வன்முறையாளர்கள், ஆயுததாரிகள் கடத்திச் சென்று கப்பம் கேட்டுத் தொல்லைப்படுத்த இடமளித்து, விட்டுக்கொடுத்து, உதவுகின்ற அதிகார வர்க்கம் அதைச் செய்யக் கூடாது. அத்தகைய குற்றங்களுக்கு இடமளித்து, ஒத்துழைப்பது அதே குற்றங்களைப் புரிவதற்கு ஒப்பானது.

உங்கள் எல்லோரையும்விட ஜனாதிபதிக்கு மனதார ஆதரவு அளிப்பவர்கள் நாம். ஆனால், அதற்காக அராஜகங்களுக்காக - நமது மக்களுக்கு எதிரான திட்டமிடப்பட்ட 'கிரிமினல்' கொடூரங்களுக்கு - நாம் துணை போக முடியாது. அதைப் பூர்த்திருக்க முடியாது.

புலிகளோடு சண்டை என்ற பெயரில் தமிழர்களுக்கு எதிராகத் திட்டமிட்டுப் படைகள் புரியும் கொடூரத்தை நாம் பார்த்திருக்க முடியாது. - என்று சீறினார் மகேஸ்வரன் எம்.பி.(உ)

# வடக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடையீட்டு மனுக்களை நீதிமன்றம் நிராகரித்தது.

மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணிகள் எம்.எல்.டி.சில்வா, எஸ்.எல்.குணசேகரா, கோமின் தயாசிறி ஆகியோர் ஆஜராகி வாதாடினார்கள்.

அவர்கள் அங்கு தெரிவித்தவையாவது:-

ஆயுதங்கள் ஏந்திய குழுக்களின் ஆயுதங்களைக்களைந்த பின்னர்தான் வடக்கு, கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. ஆனால், 1988இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ஆயுதக் குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட முன்னரே வடக்கு, கிழக்கை இணைத்து கிழக்கில் உள்ள மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கு வழிசெய்து விட்டார்.

இந்த நடவடிக்கை மூலம் கிழக்கு மாகாண சபைக்குத் தனியாக 37 உறுப்பினர்களைத் தெரிவுசெய்து, தங்களின் மகாணத்தைத் தாங்களே நிர்வகிக்கும் உரிமையை கடந்த 18 ஆண்டுகளாகக் கிழக்கு மக்கள் இழந்து வந்துள்ளனர். அவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டிருக்கின்றது.

மக்களின் வாக்களிக்கும் உரிமையை தடுக்கும் அதிகாரம் ஏதும் நாடாளுமன்றத்தின் சட்டத்தின் மூலம் ஜனாதிபதிக்கு வழங்கப்படவில்லை. ஆனால், அத்தகைய அதிகாரத்தை ஜனாதிபதிப் பதவியில் இருப்பவர் கையில் எடுத்துப் பிரயோகிப்பதையும் அதன் மூலம் மக்களின் அடிப்படை உரிமை மீறப்படுவதையும் நீதிமன்றம் அனுமதிக்கக்கூடாது. - என்றனர் அவர்கள்.

அரசுத் தரப்பிலும், தேர்தல்கள் ஆணையாளர்கள் நாயகத்தின் சார்பிலும் ஆஜரான பிரதி சொலிஸிஸ்டர் ஜெனரல் ஸி.ஏ.ரட்ணாயக்கா எதிர்த்து வாதாடினார்.

தீர்ப்பு வழங்கப்படுவது பிறிதொரு தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது.(உ)


கணக்கீடு
P.பகீரதன்
A/L 2007
பங்குடமை
Sat./Sun. 2-3p.m.
A/L 2008
தனிவியாபார முடிவு க/கு
Sat./Sun. 3-4p.m.
ஆரம்பம்:
17.09.06 ஞாயிறு
நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்.நகர்


# பருகொலைகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிலும் சூட்டுக் காயங்கள் காணப்பட்டன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. இளைஞனின் கைகளும் கட்டப்பட்டிருந்தன. சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

**யாழ். நகரத்தில்**

யாழ். நகரின் மத்திய பகுதியில் உள்ள மதுபானக் கடை ஒன்றில் இரவுநேரப் பாதுகாப்புக்காகப் படுத்திருந்த சிறுவன் உட்பட இருவர் நேற்றுமுன்தினம் இரவுசுட்டுக்கொல்லப்பட்டனர்.

மானிப்பாய் வீதியில் முட்டாஸ் கடைச் சந்திப் பகுதியில் உள்ள மதுபானக் கடையிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இதில் மற்றொரு இளைஞரும் காயமடைந்தார் என்று பொலீஸார் தெரிவித்தனர். காலை 4.30 மணியளவில் அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டார்.

கடந்த காலத்தில் இந்தக் கடையில் திருட்டுக்கள் இடம்பெற்றதைத் தொடர்ந்து இந்த மூவரும் கடையில் பாதுகாப்பிற்காக இரவில் தங்கி வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

புங்குடுதீவைச் சேர்ந்த பரமேஸ்வரன் துஷ்யந்தன் (வயது 22), தயாபரன் கேசவன் (வயது 22) ஆகிய இருவருமே இந்தச் சம்பவத்தில் பலியாகியுள்ளனர் என்று கூறப்படுகின்றது. தீவகத்தில் நேற்று திடீரென தேடுதல் நடத்தப்பட்டதால் அங்கிருந்து யாழ். நகருக்கான போக்குவரத்துக்கள் அனைத்தும் செயலிழந்திருந்தன. உறவினர்கள் உடனடியாக வரமுடியாமல் போனமைக்கு இதுவே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இவர்களுடன் இருந்தவரான துரைராசா சுதாகரன் (வயது 30) என்பவர் படுகாயங்களுக்கு உள்ளாகி யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

**கல்வியங்காட்டில்**

கல்வியங்காட்டில் நேற்றுக் காலை 9.00 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையாற்றி வந்தவரான நல்லூரைச் சேர்ந்த இரத்தினசிங்கம் பிரசாத் (வயது 26) என்பவரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

தான் கடமையாற்றும் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நின்றிருந்த சமயம் மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

**உரும்பிராயில்**

உரும்பிராய் மூன்று கோயிலடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 3.30 மணியளவில் இரு இளைஞர்கள் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இருவரின் சடலங்களும் நேற்றிரவுவரை அடையாளம் காணப்படவில்லை.

அவர்கள் பயணித்த மோட்டார் சைக்கிளும் அப்பகுதியில் கிடந்தது. (1-49)

**தும்பளையில்**

பருத்தித்துறை, தும்பளைப் பகுதியில் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

நாகர்கோயில் கிழக்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கண்மணி கேதீஸ்வரன் (வயது 26) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

நாகர் கோயிலில் இருந்து இடம்பெயர்ந்து வந்து தும்பளையில் வசித்துவந்த இவர் நேற்று அரிசி ஆலைக்குச் சென்றவேளை மோட்டார் சைக்கிளில் வந்தவர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (1-173)

**மட்டக்களப்பில்**

மட்டக்களப்பில் கருணா அணியைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் உட்பட இரண்டு பேர் நேற்றும் நேற்றுமுன்தினமும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நேற்றுக்காலை செங்கலடிப் பகுதியில் பிஸ்டல் குழு உறுப்பினர்கள் நடத்திய தாக்குதலில் கருணாகுழு உறுப்பினரான சாமித்தம்பி நிமால் (வயது-28) என்பவர் கொல்லப்பட்டார்.

விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினரே இத்தாக்குதலை நடத்தியிருக்கலாம் என ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் இரவு கறுவாக்கேணிப் பகுதியில் இலங்கை மின்சாரசபை ஊழியரான டானியல் வசந்தராஜா என்பவர் அவரது வீட்டில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.(ஐ-12)


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2006
கணேசலிங்கம் அவர்களின்
விசேட வெற்றித் தேர்வு - 1 விற்பனைக்கு
பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ். நகர்.
துர்க்கா புத்தகசாலை - சுன்னாகம்.
மொடேன் புத்தகசாலை - நெல்லியடி.
ஸ்ரீகாந் புத்தகசாலை - நல்லூர்.
சயன்ஸ் அக்கடமி - அரியாலை, நல்லூர்.

O/L 2006
Paper Class
Maths
Mon, Tue. 4-5
M.சசிகாந்
Science
Mon., Tue. 3-4
A.யூட்
ஆரம்பம் 18.09 3p.m.
BRAIN POWER INSTITUTE
(சின்னக்கடைச் சந்தைக்கருகில்)

BRIGHTMAN
பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்.நகர்.
A/L 2007
இரசாயனவியல்
★ சேதன இரசாயனம்
★ பௌதீக இரசாயனம்
By:- செல்வா
ஆரம்பம்: 18.09.06
Mon. 3 p.m.
(Mon., Wed., Fri., Sat.)


*இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.09.2006 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org